முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1648

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.04.2024,** புதன்கிழமை

1. கருணை வடிவான அண்ணலே
   கலியுகத்தைக் காக்க வந்த வள்ளலே
   திருவருள் தன்னை குருவருள் வழி
   தேடித்தேடி உலகோர்க்கு அருளுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 21 ம் நாள், 03.04.2024, புதன்கிழமை)
   ஆசிவழி உலகோர்க்கு ஞானமதை
   ஆற்றல்பட அருளுகின்ற குருராஜனே
3. அரசனே அரங்கனே நீயே கலியின் சிறந்த ஞானி
   அற்புதத்தை உலகோர்கள் அடைகின்ற வண்ணம்
   அழியாமை எனும் ஞானத்தை அனைவருக்கும்
   அகிலத்தில் பேதமின்றி அருளுகின்ற ஞான தேசிகனே
4. தேசிகனே உன் மார்க்கம் வெற்றி கொள்ளும்
   தெய்வநெறி உலகமெங்கும் பரவி நின்று
   உன் ஆசிவழி உலகோர்க்கு ஞானசித்தி
   இந்த உலகமே ஞான லோகம் ஆகும் வண்ணம்
5. வண்ணமுடன் பேராற்றல் அகிலமெங்கும்
   வல்லமைபட நிரம்பி கலியுகத்தில்
   அண்ணல் உன் அவதார நோக்கம் பூர்த்தி கொள்ளும்
   அகிலத்தார் அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகி
6. ஆகியே ஞானிகளே கலியுகத்தில்
   அளவிலா பெருகி மக்கள் வழி
   அற்புதங்கள் காணக்கூடும் சடுதி சடுதி
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–